# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### நிரம்பி வழிந்த உற்சாகத்துடன் விரிவடைந்த மதுரை மாவட்ட செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலையொட்டி 28.03.2016 அன்று மதுரையில் விரிவடைந்த மாவட்ட செயற்குழு மாவட்ட தலைவரும், உதவி மாநில செயலாளருமான தோழர் C.செல்வின் சத்யராஜ் தலைமையில் நடைபெற்றது. கடந்த ஆறு உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல்களில் ஐந்தில் மிகப்பெரிய பிரமாண்டமான வெற்றியை கண்ட மதுரை மாவட்ட சங்கம் இந்த முறையும் மிகப்பெரிய வெற்றியை பெறும் என்பதை உறுதி செய்யக்கூடிய வகையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமார் 50 பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

BSNLஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் S.சூரியன், அனைவரைய்ம் வரவேற்றதுடன், அறிக்கையினையும் முன்மொழிந்து சிறப்புரையாற்றினார். BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் A.பாபு ராதாகிருஷ்ணன் துவக்க உரையாற்றினார். பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா சிறப்புரையாற்றினார். BSNL ஊழியர் சங்கம் இந்த மூன்றாண்டு காலத்தில் BSNLஐ காக்க நட்த்திய இயக்கங்கள், ஊழியர்களின் பிரச்சனைகளில் தீர்வு கண்டது ஆகியவற்றை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார்.

உணவு இடைவேளைக்கு பின்னர் TNTCWU சங்க மதுரை மாவட்ட செயலாளர் தோழர் N.சோனைமுத்து, BSNL ஊழியர் சங்க மாநில அமைப்பு செயலாளர் தோழர் P.சந்திரசேகரன், மாநில துணைத் தலைவர் தோழர் ஜான் போர்ஜியா உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார். நமது கூட்டணியின் அங்கமாக தங்களை இணைத்துக் கொண்ட SNATTA சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் A.சித்தையா மற்றும் மாநில செயலாளர் தோழர் P.அழகு பாண்டிய ராஜா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தோழர் அழகு பாண்டிய ராஜா தனது உரையில் நேரடி நியமன TTAக்களுக்கு மத்திய மாநில BSNL ஊழியர் சங்கம் செய்த நன்மைகளை எடுத்துரைத்தது சிறப்பான அம்சமாக இருந்தது.

இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழுவின் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் ஒட்டன் சத்திரத்தில் பணியாற்றி மரணமடைந்த ஒப்பந்த ஊழியர் தோழர் K.லட்சுமணன் அவர்களின் குடும்ப நிவாரண நிதி வழங்கப்பட்டது. மதுரை மாவட்ட BSNL ஊழியர் சங்கம் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் சார்பாக திரட்டப்பட்ட நிதியுடன் தமிழ் மாநில் BSNL ஊழியர் சங்கமும் ரூ.5,000/- வழங்கியது. பங்கேற்ற ஊழியர்களின் கரவொலியுடன் ஒரு லட்ச ரூபாயை மாவட்ட சங்கத்தின் சார்பாக அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா தோழர் K.லட்சுமணன் அவர்களின் துணைவியாரிடம் வழங்கினார். சிறு குழநதைகளுடன் நிதியை தோழர் லட்சுமணன் அவர்க்ளின் துணைவியார் பெற்றுக் கொண்ட போது ப்ங்கேற்ற அனைவரும் மனம் நெகிழ்ந்தனர். இது போன்ற செயலகளை நமது BSNL ஊழியர் சங்கம் மட்டுமே நிகழ்த்திக் காட்ட முடியும் என்பதை மதுரை மாவட்ட சங்கம் மீண்டும் நிரூபித்துள்ளது. தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தோழர்களின் விவாதத்திற்கு பின் 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு தேர்தலில் மதுரையில் அதிகப்படியான வாக்குகளை பெறுவது, மாவட்ட செயலாளர் தோழர் S.சூரியனின் பணி ஓய்வு பாராட்டு விழாவை ஏப்ரல் 30 அன்று மதுரையில் நடத்துவது, அதில் அகில இந்திய உதவி செயலாளார் தோழர் S.செல்லப்பா மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் சகோதர சங்க தலைவர்கள் ஆகியோரை பங்கேற்க செய்து வெற்றிகரமாக நடத்துவது என்றும் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற உள்ள தேர்தலில் BSNL ஊழியர் சங்கம் மீண்டும் மதுரையில் சாதனை படைக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் நடைபெற்ற இந்த செயற்குழுவை ஏற்பாடு செய்த மதுரை மாவட்ட சங்கத்தையும் பங்கேற்ற அனைவரையும் தமிழ் மாநில சங்கம் மனமார வாழ்த்துகிறது.








வளமான BSNL ! நிறைவான BSNL ஊழியர்கள் !! என்பதை உறுதிப்படுத்திட வாக்களிப்போம் BSNLEUவிற்கு !!!
வாக்களிப்பீர்!
வாக்களிப்பீர்!